## அரைகுறைத் தெளிவோடு கருத்துக் கூறி

# பா.ஜ.க.வுக்குத் துணை போகும் செயலைத் தடுத்திடுவீர்!

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகியின் பேட்டி குறித்து -

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வலியுறுத்தல்!

**சத்தியமங்கலம், செப். 25–**

**"விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் புதிதாக பொறுப்புக்கு வந்துள்ள நிர்வாகி ஒருவர் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில், 'தி.மு.க. கூட்டணிக்கு குறைந்தபட்ச செயல்திட்டம் தேவை' என்று கூறியிருப்பதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் ஏற்கமாட்டார் என்று நம்புகிறோம்" என கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சத்தியமங்கலத்தில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து கேள்வி எழுப்பிய செய்தியாளர்களிடம் ஆ.இராசா எம்.பி. கூறியதாவது:-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், எங்கள் மாவட்டத்துக்காரர் என்ற முறையில் கடந்த 40 ஆண்டுகளாக கல்லூரிக் காலத்தில் இருந்து அவரை நான் அறிவேன், மாணவப் பருவத்திலேயே அவரோடு பல்வேறு பணிகளைப் பகிர்ந்து உள்ளேன். அவரது இடதுசாரி சிந்தனை இந்தியா முழுக்க எதிரொலிக்கிறது.

மதச்சார்புக்கு மதவாதத்தை ஒழித்து சமூக நீதியைக் காப்பதில் தி.மு.க.வுடன் தோள் கொடுக்கும் அரசியல் கட்சியாக திருமாவளவனின், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உள்ளது. இடதுசாரிச் சிந்தனையில் இருந்து சிறிதும் வழுவாமல் எழுச்சித்தமிழர் திருமா உள்ளார். இந்தச்சூழலில் 'தி.மு.க. கூட்டணிக்கு குறைந்தபட்ச செயல்திட்டம் தேவை' என்ற ஒரு கருத்தை அந்தக் கட்சியில் புதிதாகச் சேர்ந்திருக்கும் ஒருவர்



கொள்கைப் புரிதல் இன்றி பேசியிருப்பது கூட்டணி அறத்துக்கு, அரசியல் அறத்துக்கு ஏற்புடையது அல்ல. வருந்தத்தக்கதாகும்.

**திருமாவளவன் ஏற்க மாட்டார்!**

எனவே இடதுசாரிச்சிந்தனையில் தீர்க்கமான ஆழ்ந்த நம்பிக்கையுள்ள, தமிழ் மொழி வரலாற்றுப் பின்னணியோடு கூடிய அரசியல் புரிதலுள்ள திருமாவளவன் நிச்சயமாக இந்தக் கருத்தை ஏற்க மாட்டார். போதுமான புரிதல் இன்றி வி.சி.க.வில் புதிதாகச் சேர்ந்து பொறுப்பில் இருக்கும் ஒருவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு தெளிவின்றி பேட்டி யளித்திருக்கிறார் என்றே இதைக் கருதுகிறேன்.

பகுத்தறிவு, சமூக நீதிக் கொள்கை, மதச்சார்புக்கு எதிரான கொள்கை, தலித் அரசியலை முன்னெடுத்து, சனாதன தர்மத்திற்கு எதிரான கொள்கைகளை திருமா முழங்குகின்றார். அவர் இந்தக் கருத்துக்களை ஏற்க மாட்டார், அவர் உரிய நடவடிக்கை மேற்கொள்வார் என்று நம்புகிறேன்.

**நகைப்புக்குரியது!**

இரு வேறுபட்ட கொள்கை உடைய கட்சிகள் தேர்தலைச் சந்திக்கும்போது குறைந்தபட்ச செயல் திட்டம்தேவை. தி.மு.க.-பா.ஜ.க. உடன் கூட்டணி வைத்தபோது குறைந்தபட்ச செயல் திட்டம் கொண்டுவரப்பட்டது. பொது சிவில் சட்டம் காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து போன்றவற்றில் தி.மு.க. வுக்கு எதிர்மாறான கருத்துள்ள பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தபோது குறைந்தபட்ச செயல் திட்டம் தேவைப்பட்டது. இது அரசியல் தெளிவு படைத்தவர்களுக்குத் தெரியும்.

இப்படிப்பட்ட நிலையில் இது போன்ற விவரங்கள் தெரியாமல், அரசியல் முதிர்ச்சியின்மை காரணமாக தி.மு.க. கூட்டணியில் குறைந்தபட்ச செயல் திட்டம் கேட்பது நகைப்புக்குரிய ஒன்று. இடதுசாரி சிந்தனை உள்ள அனைவரும் இந்தக் கூட்டணியில் உள்ளோம். இது கொள்கைக் கூட்டணி. இடதுசாரி கொள்கை உடைய கூட்டணி. கொள்கை மாறுபாடு யாருக்கும் கிடையாது.

**தன்னிச்சையாக வெளியிடும் கருத்துகள்!**

சமத்துவம், அரசியல் சட்டம், மதச்சார்புக்கு எதிரான கொள்கை, சாதி ஒழிப்பு, தமிழ் வளர்ச்சி, மொழி, இனம் காப்பது போன்ற அனைத்திலும் கம்யூனிஸ்ட், காங்கிரஸ் என அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் உள்ளது. இடதுசாரி கொள்கையை முழுமையாக ஏற்றுள்ள தி.மு.க. கூட்டணிக்கு குறைந்தபட்ச செயல் திட்டம் தேவை என்பது புரியாமை, முதிர்ச்சியின்மையை காட்டுகிறது. இது போன்றவர்கள் தன்னிச்சையாக வெளியிடும் கருத்துக்களை திருமா ஒரு காலமும் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று எண்ணுகிறோம்.

அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் இறையாண்மை சமதர்மம், ஜனநாயகம், மதச்சார்பற்ற ஆகிய நான்கு அடிப்படை பண்புகளைக் காப்பாற்றும் மிகப்பெரிய பொறுப்பு தி.மு.க. கூட்டணிக்கும் அதற்கு தலைமை ஏற்றுள்ள - கழகத் தலைவர் - முதலமைச்சருக்கும் உள்ளது. இப்படி பேசுவது கூட்டணி அறத்திற்கு சரியாக வராது. பா.ஜ.க.விற்கு துணை போகும் அளவிற்கு இது போன்ற குழப்பத்தை விளைவிக்கும் கருத்துச் சொல்வதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினரே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். திருமாவளவன் விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்வார் என நம்புகிறேன்.

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. கூறினார்.

மேலும் வி.சி.க. எம்.பி. ரவிக்குமார் 'எக்ஸ் தளத்தில்' பதிவிட்டிருப்பதை சுட்டிக்காட்டிய ஆ.இராசா எம்.பி., "சமூக நீதியில் அக்கறை உள்ளவர்களும் அரசியல் சட்டம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் பற்றுள்ள அனைத்து சக்திகளும் விழிப்புணர்வோடு இருந்து செயல்பட வேண்டிய காலகட்டம் இது என்பதை உணர்ந்திடுவோம்" என்றார்.

---

## 'வாலிபப் பெரியார்'

# ஏ.வி.பி.ஆசைத்தம்பி இன்று 101-ஆவது பிறந்த நாள்!



**'வாலிபப் பெரியார்' என்று அழைக்கப்பட்ட**

**திராவிட இயக்கத் தீரர்**

**அண்ணாவின் அன்புத் தம்பி**

**ஏ.வி.பி. ஆசைத்தம்பி**

**இன்று (24.9.2024) 101-ஆவது பிறந்த நாள்!**

---

# சிந்துவெளி (திராவிட நாகரிக) பிரகடன நூற்றாண்டுத் தொடக்க விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை!

*சென்னை, செப்.25-* சிந்துவெளி (திராவிட நாகரிக) பிரகடன நூற்றாண்டு தொடக்க விழா நேற்று (24-9-2024 - செவ்வாய்க்கிழமை) நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றம், பெரியார் திடலில் நடைபெற்றது.

திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யம் தலைவர் முனைவர் பெ.ஜெகதீசன் தொடக்கவுரையாற்றினார்.

சர் ஜான் மார்ஷல் படத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்து வைத்து தலைமை உரை நிகழ்த்தினார்.

சிந்துவெளி ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன், இந்திய தொல்லியல் துறை இயக்குநர் தொல்லியல் அறிஞர் கி.அமர்நாத் இராமகிருஷ்ணா, திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யம் செயலாளர் பேராசிரியர் அ.கருணானந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

திராவிடர் கழகப் பொருளாளர் வீ.குமரேசன் நன்றி கூறினார்.

திராவிடர் கழகம்,திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யம், பெரியார் நூலக வாசகர் வட்டம் இந்நிகழ்வை ஒருங்கிணைத்திருந்தது.

---

## முதலமைச்சரின் கனவு நனவாகியுள்ளது!

# மினி 'டைடல்' பூங்காக்கள்: தஞ்சை, சேலம் மக்களுக்கு அற்புதமான நாள்!

## தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

**சென்னை, செப். 25-**

**"தஞ்சை, சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் திறக்கப்பட்டதையொட்டி முதலமைச்சரின் கனவு நனவாகியுள்ளது" என்று தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

திராவிட நாயகர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் பரவலாக்கப்பட்ட வளர்ச்சி என்ற நோக்கத்திற்கு இன்று மற்றுமொரு பொன் நாள்!

குறிப்பாக தஞ்சாவூர் மற்றும் சேலம் மக்களுக்கு அற்புதமான நாள்!



தஞ்சாவூர் மற்றும் சேலத்தில் மினி டைடல் பூங்காக்களைத் தொடங்கி, உலகத்தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை இந்த நகரங்களுக்குக் கொண்டுவந்திருக்கிறார், தமிழ் நாட்டின் முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள்.

தஞ்சாவூர் தற்போது தனது முதல் முக்கிய தகவல் தொழில் நுட்ப வசதியைப் பெற்றுள்ளதற்கு டெல்டா பகுதியின் சட்டமன்ற உறுப்பினராக, மிகவும் பெருமையடைகிறேன்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, இத்திட்டத்தை 15 மாதங்களிலேயே நிறைவு செய்துள்ளது. டைடல் பார்க்களின் தேவை மிகுந்திருப்பதால், நம் மதிப்புக்குரிய முதலமைச்சரின் ஒப்புதலை பெற்று, விரைவில் இரண்டாம் கட்டப் பணிகளை தொடங்கும் வாய்ப்புள்ளது.

**சேலத்தில் விரைவில் டெக்ஸ் பார்க்!**

சேலம் போன்ற இரண்டாம் கட்ட நகரங்களுக்கு அதிக தகவல் தொழில்நுட்பத் தொழில் உள்கட்டமைப்பைக் கொண்டு வர வேண்டும் என்ற நம் முதலமைச்சரின் கனவு, இப்போது SalemTidelNeo மூலம் நனவாகியுள்ளது. மேலும், விரைவில் வரவிருக்கும் டெக்ஸ் பார்க் சேலம், நெசவுத் துறையில் பெரிய அளவில் ஊக்கமளிக்கும்.

இந்த மினி TIDEL பூங்காக்கள், புதிய பகுதிகளிலும் 2 மற்றும் 3ஆம் கட்ட நகரங்களிலும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான சான்றாகும், இதனால் நம் மாநிலத்தின் திறமை மிக்க இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை சொந்த ஊர்களிலேயே தொடர முடியும்.

இன்னும் பல MiniTIDEL பார்க்குகள் தொடங்கப்படுவதற்கான வரிசையில் உள்ள நிலையில், நம் முதலமைச்சரின் TrillionDollarTN என்ற இலக்கை அடைவதற்கான விரைவுப் பாதையில் நாம் விரைந்து முன்னேறிக் கொண்டுள்ளோம்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

# மேல்மலையனூர் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றிய தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

*செஞ்சி, செப்.25-* விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி மேல்மலையனூர் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றிய தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் வளத்தி, அவலூர்பேட்டை, மேல்மலையனூரில் நடைபெற்றது.

ஒன்றிய அவைத் தலைவர்கள் மன்ன ஏழுமலை, உதயகுமார், ஆறுமுகம் ஆகியோர் தலைமைதாங்கினர்.

மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் ஜெய் சங்கர், ராமமூர்த்தி, செந்தில் குமார், ஒன்றிய பொருளாளர் சரவணன், ஒன்றிய துணை செயலாளர்கள் பெருமாள், தமிழரசி பாண்டியன், ஆறுமுகம், மேல் மலையனூர் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் அர்ஷத் பேக், ஜிபி எஸ்.முருகன், ரேணு, ஒன்றிய பொருளாளர் பாலமுருகன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவசக்தி, ரகுராமன், தாஹிரா அப்துல்வகாப், மத்திய ஒன்றிய நிர்வாகிகள் ஒன்றிய பொருளாளர் கோபாலகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதிகள் ரவிச்சந்திரன், குபேந்திரன், ராஜா, ஒன்றிய துணை செயலாளர்கள் வெங்கடேசன், ஹரிதாஸ், காந்திமதி ஏழுமலை, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மேற்கு ஒன்றிய செயலாளர் சாந்தி சுப்பிரமணியன், மத்திய ஒன்றிய செயலாளர் நாராயணமூர்த்தி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் செந்தமிழ்ச் செல்வன், கண்மணி நெடுஞ்செழியன், செல்வி ராம சரவணன், ராம சரவணன், எஸ்.பி. சம்பத், ஆர். சம்பத், டி.பி. ஏழுமலை, கந்தவேல், ஞானசேகர் குமார் பழனி ஆறுமுகம், விஜய லட்சுமி ஜெய்சங்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கலைஞர் பயின்ற திருக்குவளை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை' விரிவாக்கம் செய்தார். இப்பள்ளியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வுத் திட்டத்தின் கீழ் 193ஆவது ஆய்வை மேற்கொண்டார். கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி தொகுதிக்குட்பட்ட திருக்குவளை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு மாணவர்களிடம் கலந்துரையாடினார். முன்னதாக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கலைஞர் அவர்கள் பிறந்த இல்லத்திற்கும் சென்று மரியாதை செலுத்தினார். அஞ்சுகம் முத்துவேலர் அறக்கட்டளையின் அறங்காவலர் எனும் முறையில் அருகில் கட்டப்பட்டு வரும் கலைஞர் மணிமண்டபத்தின் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டார்.

---

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; அமெரிக்காவில் அண்மையில் நடந்த "குவாட்" மாநாட்டில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், நமது பிரதமர் மோடியின் பெயரையே மறந்துவிட்டாராமே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; நமது பிரதமர் மோடி, தேர்தல்களின் போது அவர் கொடுத்த உறுதி மொழிகளை மறந்துவிட்டார்; இந்தியாவில் மொழிவழி தேசிய இனங்களின் தனித் தனிச் சிறப்பியல்புகளை மறந்துவிட்டார்; ஓராண்டுக்கும் மேலாகப் பற்றி எரியும் மணிப்பூரை மறந்துவிட்டார்; மதங்களிடையே வெறுப்பைத் தூண்டும் தனது பேச்சுகளை மறந்துவிட்டு, தேச பக்தி - ஒற்றுமை என்று அடிக்கடி பேசுகிறார்; என்பதையெல்லாம் ஜோ பைடன் அறிந்து வைத்துக்கொண்டுதான், பிரதமர் மோடியின் பெயரையே மறந்துவிட்டாரோ என்னவோ?**